குழந்தைகள் நலன் மற்றும் சிறப்புச் சேவைகள் துறை

மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு விழுப்புரம்

பத்திரிக்கை செய்தி

தமிழ்நாடு குழந்தைகள் நலன் மற்றும் சிறப்புச் சேவைகள் துறையின் கீழ் மிஷன் வட்சாலயா திட்டத்தின் வாயிலாக மாவட்ட ஆட்சியர் அவர்களை தலைவராக கொண்டு செயல்பட்டு வரும் விழுப்புரம் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகில் உள்ள குழந்தைகளுக்கான அவசர உதவி அலகின் ஒருங்கிணைப்பாளர் பணியிடம் மற்றும் விழுப்புரம் மாவட்ட - புதிய பேருந்து நிலையத்தில் செயல்படவுள்ள குழந்தைகளுக்கான அவசர உதவி மையத்திற்கான மேற்பார்வையாளர் - 3 மற்றும் வழக்கு பணியாளர் -3 பணியிடங்களை ஒப்பந்த அடிப்படையில் நிரப்பப்பட உள்ளதால் அதற்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

| **வ. எ ண்** | **திட்டத்தின் விவரம் மற்றும் பதவி** | **எண்ணிக்கை மற்றும் மாத ஊதியம்** | **கல்வி தகுதி, அனுபவம் மற்றும் வயது வரம்பு** |
|---|---|---|---|
| 1. | குழந்தைகளுக்கான அவசர உதவி அலகு - ஒருங்கிணைப்பாளர் | 1 பதவி<br>தொகுப்பூதியம்<br>ரூ. 28000/- | அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழத்தில் சமூகப்பணி/ சமூகவியல்/ குழந்தை மேம்பாடு/ மனித உரிமைகள் பொது நிர்வாகம்/ உளவியல்/ மனநலம்/ சட்டம்/ பொது சுகாதாரம்/ சமூக வள மேலாண்மை ஆகியவற்றில் முதுகலைப் பட்டம்.<br>(அல்லது)<br>அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழத்தில் சமூகப்பணி/ சமூகவியல்/ குழந்தை மேம்பாடு/ மனித உரிமைகள் பொது நிர்வாகம்/ உளவியல்/ மனநலம்/ சட்டம்/ பொது சுகாதாரம்/ சமூக வள மேலாண்மை ஆகியவற்றில் |

| | | | |
|---|---|---|---|
| | | | இளங்கலைப் பட்டம். மற்றும் பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாடு/ சமூக நலன் சார்ந்த துறையில் திட்ட உருவாக்கம்/ செயல்படுத்தல், கண்காணிப்பு மற்றும் மேற்பார்வையில் 2 வருட அனுபவம் மற்றும் கணினியியல் திறமை பெற்றிருக்க வேண்டும்.<br>வயது வரம்பு 42 ஆண்டுக்குள்<br>குழந்தைகள் அவசர உதவி அலகில் பணிப்புரிந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும் (வயது வரம்பு தளர்வு 52 ஆண்டுக்குள்) |
| 2 | பேருந்து நிலையம் - குழந்தைகளுக்கான அவசர உதவி மையம் மேற்பார்வையாளர் | 3 பதவி தொகுப்பூதியம் ரூ. 21000/ | அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழத்தில் சமூகப்பணி/ கணினி அறிவியல்/தகவல் தொழில் நுட்பம்/ சமூகம் சார்ந்த சமூகவியல்/சமூக அறிவியல் ஆகியவற்றில் இளங்கலைப் பட்டம். மற்றும் கணினியியல் திறமை பெற்றிருக்க வேண்டும்.<br>வயது வரம்பு 42 ஆண்டுக்குள்<br>குழந்தைகள் அவசர உதவி அலகில் பணிப்புரிந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும் (வயது வரம்பு தளர்வு 52 ஆண்டுக்குள்) |
| 3 | வழக்கு பணியாளர் | 3 பதவி தொகுப்பூதியம் ரூ. 18000/ | அங்கீகரிக்கப்பட்ட பள்ளியில் 12-ம் வகுப்பு முடித்திருத்தல் வேண்டும். தகவல் தொடர்பு திறன் இருத்தல் வேண்டும்.<br>வயது வரம்பு 42 ஆண்டுக்குள் |

| | | | |
|---|---|---|---|
| | | | குழந்தைகள் அவசர உதவி மையத்தில் பணிப்புரிந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும் (வயது வரம்பு தளர்வு 52 ஆண்டுக்குள்) |

இதற்கான விண்ணப்பபடிவத்தை விழுப்புரம் மாவட்ட இணையதளத்தில் https://viluppuram.nic.in பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் அல்லது விழுப்புரம் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகிலிருந்து பெற்றுக்கொள்ளலாம். தகுதி வாய்ந்த நபர்கள் மேற்கண்ட பதவிக்கு அதற்கான அமைந்த படிவத்தில் (செய்தி வெளியீடு நாளிலிருந்து 15 நாட்களுக்குள்) கீழ்கண்ட முகவரியில் கிடைக்கப்பெறுமாறு விண்ணப்பிக்கலாம்.

முகவரி

மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு,
மாவட்ட ஆட்சியரக அலுவலக வளாகம் (பழைய உணவக கட்டிடம்),
விழுப்புரம் மாவட்டம்- 605602.
தொலைப்பேசி எண் - 04146 -290659

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் மேற்குறிப்பிட்ட அலுவலகத்திற்கு வந்து சேரவேண்டும். மேலும் முழுமையாக பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள், கல்வி சான்றிதழ் நகல்கள் இணைக்கப்படாத விண்ணப்பங்கள் மற்றும் காலதாமதமாக வரப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். தகுதி மற்றும் அனுபவத்தின் அடிப்படையில் நியமனம் அமையும்.

மாவட்ட ஆட்சியர்
விழுப்புரம்